புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

================================================================================

# கையறுநிலைப் பாடல்களில் வடக்கிருத்தல்

சி.ஜோதிலட்சுமி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வியல் துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம்.

================================================================================

ஆய்வுச் சுருக்கம்

புறநானூற்றில் ஏராளமான கையறுநிலைப் பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வடக்கிருத்தல் பாடல்கள் பத்துக் காணப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களில் வடக்கிருத்தல் என்பதன் பொருள், வடக்கிருந்த மனனர்கள் மற்றும் புலவர்களின் பெயர்ப்பட்டடியல், தமிழ் இலக்கியங்கள் மட்டுமில்லாது சமண சமயத்திலும் வடக்கிருத்தல் என்பது சல்லேகனை என்பதையும் வடக்கிருத்தலுக்கான அடிப்படைக் காரணிகள், அவை மேற்கொள்ளும் விதம், யாரெல்லாம் வடக்கிருக்கலாம் என்பதையும் வடக்கிருத்தலின் திரிபாகாத்தான் உண்ணாநோன்பாக மாறியுள்ளது என்பதை இக்கட்டுரை உணர்த்துவதாக அமையவுள்ளது.

கலைச்சொற்கள்

கையறுநிலை, வடக்கிருத்தல், சல்லேகனை, வற்கடம், துறக்கம், நடுகல், மடந்தை, சிறுவழிமடங்கி போன்ற கலைச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் 44 கையறுநிலைப் பாடல்கள் உள்ளன. அவற்றுள் பத்துப் பாடல்கள் வடக்கிருத்தல் செய்திகளை எடுத்துரைக்கின்றன.

வடக்கிருத்தலைப் பற்றி கழாத்தழையார், வெண்ணிக்குயத்தியார், பொத்தியார், கண்ணகனார், கருவூர்சதுக்கத்துப்பூதனார் போன்ற புலவர்கள் பாடியுள்ளனர். வடக்கிருத்தலுக்கான விளக்கம், பெயர்ப் பட்டியல், மன்னர்களுக்கும் புலவர்களுக்குமிடையே உள்ள நட்பின் ஆழம், வடக்கிருத்தலுக்கான காரணிகள் மன்னர்களின் கொடைத்திறன் தமிழ் இலக்கியம் மட்டுமில்லாது சமண சமயத்திலும் வடக்கிருத்தல், அதன் எச்சமாக உண்ணாநோன்பு உருவெடுத்துள்ளது என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையவிருக்கிறது.

## கையறுநிலை

கையறுநிலை என்பது தலைவனையோ அல்லது தலைவியோ இறந்தப்பிறகு அவர்களின் அன்பிற்குரியவர்கள் செய்வதறியாமல் திகைத்து நிற்பது தான் கையறுநிலையாகும். இதனை தொல்காப்பியர்,

“ கழிந்தோர் தேயத்து அழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்”[2]

என்ற நூற்பாவின் மூலம் கையறுநிலைக்கு தொல்காப்பியர் விளக்கம் அளிக்கிறார். உரையாசிரியர்கள் இளம்பூரணர் கழிந்தோர், ஒழிந்தோர் என்பதற்கு செத்தார், சாவாதார் என்று பொதுப்படையாக கூறுகிறார். ஆனால் நச்சினார்க்கினியர் கழிந்தோர் என்பதற்கு கணவனும் மனைவியும் இறந்துப்பட என்றும் ஒழிந்தோர் என்பதற்கு ஆயத்தாரும் விறலியரும் என்று வரையறுக்கிறார்.

வடக்கிருத்தல்

இந்தியாவிற்கு வடக்கே இமயமலை அமைந்துள்ளது. அம்மலையில் சிவன் வீற்றிருக்கிறான். அதனால் வீடுபேறு அடைய நினைப்பவர்கள் ஆலமரம்(விருட்சகம்) கீழ் ''புண்ணியத் திசையான வடதிசையை நோக்கி தருப்பைப் புல்லின் மேல்அமர்ந்து சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர்விடுவதே வடக்கிருத்தல்''[2] இதனை ஆண்கள் மட்டும் மேற்கொண்டுள்ளனர். பெண்கள் மேற்கொண்டதாக சங்க இலக்கியத்தில் வடக்கிருந்ததாக குறிப்புகள் இல்லை.

குபேரன் வடக்கு திசைக்கு அதிபதி என்பதால்தான் வாழப்பிறந்தவனுக்கு வடக்கு என்ற பழமொழி உருவாயிற்று. வடகிழக்கு ஈசனின் திசையாகும். தெற்கு திசையில் அமாவாசை நாட்களில் இறந்துப்போன மூதாதையர்களின் ஆத்மாக்கள் செல்வதற்கு ஏதுவாக உள்ள திசையாகும். அதனால் அவர்களுக்கு படையலிட்டு வழிபடுகின்ற திசையாக தெற்குத்திசை அமைந்துள்ளது.

அறிவியல் நோக்கில் பார்த்தால் வடக்கு தெற்கு என்பது காந்த திசைகளாகும். வடக்கு திசையில் அதிக நேரம் அமர்ந்திருந்தால் காந்தவிசை உடலை வேகமாக பாதிப்படையச் செய்து இறப்பிற்கு வழிவகுக்கிறது.

வடக்கிருத்தலைப் பற்றி சமண சமயத்தில் ''உத்ரகமனம் அல்லது மகாப்பிரத்தானம்''[3] என்று அழைக்கப்பட்டதாக மயிலை சீனிவேங்கடசாமி கூறியுள்ளார். போரில் வீர மரணம் அடைந்த மன்னர்கள் மற்றும் சாதாரண வீரர்களுக்கும் நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் வடக்கிருத்தல் என்பது இல்லை.

வடக்கிருந்தோர்

| வ.எண் | மன்னர்கள் | புலவர்கள் |
|---|---|---|
| 1 | சேரமான் பெருஞ்சேரலாதான் | கழாத்தலையார் |
| 2 | பாரி மன்னன் | கபிலர் |
| 3 | பிசிராந்தையார் | பொத்தியார், கண்ணகனார் |
| 4 | கோப்பெருஞ்சோழன் | கருவூர்பெருஞ்சதுக்கத்துப் பூதனார் |

வடக்கிருத்தலுக்கான அடிப்படைக் காரணிகள்

சங்ககாலத்தில் சேர, சோழ மற்றும் பாண்டிய மன்னர்களுக்கிடையே போர்கள் நடைபெற்றன. ஏனென்றால் தங்களுடையப் பகுதிகளை விரிவுப்படுத்திக் கொள்ளவும் தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளவும் போரிட்டனர். சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் கரிகாற்பெருவளத்தானுக்கும் வெண்ணிப்பறந்தலை என்னுமிடத்தில் போர் நடைப்பெற்றது. சேரமான் பெருஞ்சேரலாதன் மார்பில் அம்புப் பட்டு புறப்புண் ஏற்பட்டது. அதனை அவமானமாகக் கருதி வடக்கிருந்தச் செய்தியைக் கழாத்தலையார் பாடியுள்ளார். ''ஒத்த வலிமையுடையவருடன் மட்டுமே போர் செய்தலை விரும்பிய தமிழர்கள் முதுகில் புண் ஏற்படாமல் மார்பில் வேலைத்தாங்கி விழுப்புண் பெறுதலையே விரும்பினர்''[4] என்று மன்னர்களின் விருப்பமாக இருந்துள்ளது என்பதனை சாமிநாதையர் கூறியுள்ளார்.

'' போர்அடுதானை எவ்வி மார்பின்
எஃகுஉறு விழுப்புண் பல் என்''[5]

என்னும் பாடலடியில் தமிழக வீரர்களின் போர் விழுமியங்களை உணர்த்துகின்றது.

'' தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறந்ததை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன் ஈங்கு ''[6]

என்ற பாடலடிகள் மூலம் கரிகாலனின் வெற்றியையும் சேரமான் பெருஞ்சேரலாதனின் தன்மான உணர்வினையும் வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் பாடியுள்ளதன் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது. மேலும் திருக்குறளில் ,

'' மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''[7]

இக்குறளுக்கு இலக்கணமாக விளங்குகிறார். சேரமான் பெருஞ்சேரலாதான் புறப்புண் பட்டதை அகநானூறும் சான்று பகர்கிறது.

"கரிகாற் வளவனோடு வெண்ணிப்பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதான்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென "[8]

என்று போரில் வடக்கிருந்த மன்னர்களுக்கும் இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு மக்கள் வழிபடுவது வழக்கம் என்பதை "சான்றோர்களுக்கு இனிமையாகவும் அவர்கள் இருக்கும் இடத்திற்குப் புலவர்கள் வந்து வழிப்படும் செய்தியை"[9] மு.சண்முகம் குறிப்பிடுகிறார்.

கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார்

கோப்பெருஞ்சோழனின் இருமகன்களும் தந்தையின் அரசாட்சிப்பொறுப்பைப் பெற எண்ணி சகோதரர்களுக்கிடையே பகையேற்பட்டது இதன் விளைவாக தந்தையின் மீது படையெடுக்க ஆரம்பித்தனர். இதனையறிந்த புல்லாற்றூர் எயிற்றியனார் மன்னனிடம் அறிவுரைக் கூறி உன் அரசாட்சிப் பொறுப்பைத் பிள்ளைகளிடம் ஒப்படைக்கச் செய்தார். பிறகு மன்னனும் ஒப்படைத்துவிட்டு இது தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதி உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டார். இதேபோன்று "அரசுரிமைக்காக மகன் தந்தையைக் கொல்லுதலும் அண்ணன் தம்பியைக் கொல்லுதலும் போன்ற நிகழ்ச்சிகள் மொகலாய மன்னர்களிடமும் இருந்தது "[10] என்று செண்பகலட்சுமி குறிப்பிட்டுள்ளார். இதே போன்று புறநானூற்றுத் தமிழ் மன்னர்களிடம் இந்த அரசுரிமை பற்றிய செய்தி மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. மன்னர்களுக்கும் புலவர்களுக்கு உள்ள நட்பையும் நட்பிற்குரிய காரணங்களாகப் " புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி என்ற மூன்றனுள் உணர்ச்சி மட்டுமே ஊன்றுகோலாகக் கொண்டு பிசிராந்தையாருடன் கொண்டிருந்த நட்பினை சான்றோர்கள் உரைப்பர்"[11] இதற்குச் சான்றாக கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரின் நட்பினை கூறலாம். இதனை விளக்கும் வகையில்,

" வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழுதின்றி வந்தவன் அறிவும்
வியத்தொரும் வியத்தொரும் வியப்பு இறந்தன்றே"[12]

என்ற பாடலின் மூலம் கோப்பெருஞ் சோழன் கூறியது போல் வந்ததையெண்ணி புலவர்கள் பெருமிதம் அடைந்தனர். இதனை பொத்தியாரின் பாடல்வழி அறிந்துக் கொள்ள முடிகிறது. மேலும் திருவள்ளுவரும்

" புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் "[13]

இக்குறளின் மூலம்நட்பின் ஆழத்தை அறிய முடிகிறது.

கோப்பெருஞ்சோழன்- பொத்தியார்

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பை நேரில் கண்ட பொத்தியார் நானும் உங்களுடன் வடக்கிருப்பேன் என்றுக் கூறுவதைக்கேட்ட சோழன் மறுத்துவிட்டார். ஏனெனில் உன் மனைவி கருவுற்றிருக்கிறாள். ஆகையால் பிள்ளைப்பேறு அடைந்துப் பிறகு வா என்று கூறிவிட்டு இறந்தார். அதேபோல் பிள்ளைப்பேறு அடைந்தப்பின் சென்றால் சோழன் நடுகல்லாகிவிட்டான். அவரிடம் பொத்தியார் வடக்கிருக்க இடத்தைக்காட்ட வேண்டும் என்று கதற சோழன் பொத்தியாரின் மனக்கண்முன் தோன்றி இடத்தைக்காட்டினார். இதன்மூலம் அவர்களின் நட்பின் ஆழத்தை "சிறு வழி மடங்கி என்றார். நிலைப்பெற நடப்பட்ட கல்லான இடத்தும் ( நிலைபெறு நடுகல்) உடம்புடன் உயிர் இணைந்தது (உடம்பொடு இன்னுயிர் விரும்பும் ) "[14] இதுபோன்ற பழமையான நட்புடையவரிடம் சென்றால் கண்டிப்பாக இடம் கொடுப்பார் என்று நம்பி பொத்தியார் சோழனிடம் வந்தார். இதனை திருவள்ளுவரும்,

" உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"[15]

உடம்பிற்கும் உயிர்க்குள்ள தொடர்புகள் எத்தன்மையானவையோ அத்தன்மையானவை என்று கோப்பெருஞ்சோழன், பொத்தியார் நட்பை குறள்வழி அறிந்துக் கொள்ள முடிகிறது.

பாரி - கபிலர்

பறம்புமலையை ஆட்சி செய்தவன் பாரி. மூவேந்தர்களும் சூழ்ச்சி செய்து படையெடுத்துச்சென்று பாரியைக் கொன்றனர். யாருமில்லாமல் பாரி மகளிர் தனியே நின்று

செய்வதறிமால் நின்றபொழுது அவைக்கள புலவரும் நண்பருமான கபிலர் பாரி மகளிரை அழைத்துக்கொண்டு சென்று பல குறுநில மன்னர்களிடம் சென்று திருமணம் செய்துக்கொள்ளும்படி வேண்ட அவர்கள் யாரும் திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டனர் பிறகு செய்வதறியாமல் பார்ப்பனரிடம் ஒப்படைத்துவிட்டு பெண்ணையாற்றங் கரையோரம் வடக்கிருந்தார். இதனை,

" வலியழிந்தார் மூத்தோர் வடக்கிருந்தார் நோயின்
நலிபழிந்தார் நாட்டறைப்போய் நைந்தார் மெலிவொழிய
இன்னவரால் என்னராய் ஈந்த ஒருதுற்று
மன்னவராய்ச் செய்யும் மதித்து"[16]

என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. உயிர் துறந்தவர்களுக்கு நடுகல் அமைப்பது பண்டைய தமிழர்களின் மரபாக இருந்துள்ளது என்ற செய்தியை அறிய முடிகிறது.

ஒளவையார் – அதியமான்

சங்ககால மன்னர்களும் வள்ளல்களும் புலவர்களைத் தங்களைவிட உயர்வாகக் கருதினர். ஏனெனில் புலவர்கள்தான் அறிவுரைகளையும் கல்வியையும் தரமுடியும் என்று உணர்ந்த அரசர்கள் புலவர்களைப் போற்றிப் பாதுகாத்தனர். அதியமான் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஒளவையாருக்கு அதியமான் அளித்த செய்தியை,

"பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே"[17]

இப்பாடலடியின் வாயிலாக அதியமான் ஒளவையாரின் நட்பின் ஆழத்தை அறியலாம். மேற்கூறிய செய்திகளையெல்லாம் பார்க்கும்போது "தன்மானம், வீரம், நட்பு, கொடைத்திறன், தன்நோக்கம் நிறைவேறாமை"[18] போன்றவைகள் வடக்கிருத்தலுக்கான அடிப்படைக்காரணிகளாகும் என்று இரா.முருகன் கூறுகின்றார்.

சமண சமயத்தில் வடக்கிருத்தல்

சமண சமயத்தில் சந்தரா அல்லது சல்லேக்கனா அல்லது சல்லேகணை (வடக்கிருத்தல்)என்பது சமணர்களின் கொள்கையாகக் கூறப்படுகிறது. வடக்கிருத்தல் என்பதனை எப்போது செய்யவேண்டுமென்று அருங்கலச்செப்பு,

"இடையூறு ஒழிவின்நோய் மூப்பு இவை வந்தால்
கடை திறத்தல் சல்லே கணை"[19]

இந்நூற்பா மூலம் மனிதர் ஒருவருக்கு பொறுக்க முடியாத மனவேதனையைத் தருகின்ற இடையூறு, தீராத நோய், மிகுந்த மூப்பு போன்றவை உண்டாகும்போது சல்லேகணை செய்து கொண்டு உயிர் விடலாம் என்று கூறுகிறது

சங்க இலக்கியத்தில் ஆண்கள் மட்டும்மேற்கொண்ட வடக்கிருத்தலை சமணசமயத்தில் ஆண்கள் .பெண்கள் இருவரும் மேற்கொண்ட செய்தியை அறிய முடிகிறது ,

"வற்கடம் முதலான பஞ்சக் காலத்திலும் அல்லது வறுமையான காலத்திலும் சல்லேகணை செய்யலாம்"[20] என்ற செய்தியை மயிலை சீனிவேங்கடசாமி கூறியுள்ளதால் வறுமையிலும் வடக்கிருந்து உயிர் துறந்தவர்கள் இருந்துள்ளனர் என்ற செய்தியை அறியமுடிகிறது.

சல்லேகணை செய்யும் முறை

சமணர்களிடம் "அஞ்சினான் புகலிடம்"[21] என்ற ஒரு இடம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. சமண சமயத்தினரின் நான்கு முக்கிய தானங்களுள் ஒன்று அபயதானம் சமண ஆலயங்களுக்கு அருகில் உதவிக்கேட்டு வந்தோரை பாதுகாப்பதற்கென தனி இடங்கள் இருந்தன. இவற்றுக்கு அஞ்சினான் புகலிடம் என்று பெயர். "கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாப்புரம் அரண்மனையில் வெள்ளாடைக்காரருக்கு அஞ்சினான் புகலிடம் அளித்ததாகக் கூறும் கல்வெட்டு இன்றும் காணப்படுகிறது"[22]

கையறுநிலைப் பாடல்கள் வடக்கிருத்தல், சல்லேகணை, அஞ்சினான் புகலிடம் ஆகிய மூன்றையும் தொடர்புப்படுத்திப் பார்க்கும்போது தன்மானம், வீரம், தன்நோக்கம் நிறைவேறாமை, நட்பு போன்றவை நிறைவேறாமல் போகும்போது வடக்கிருத்தலை மேற்கொண்டிருக்கலாம்.

வடக்கிருக்கும்போது தேவைப்பட்டால் நீர் மட்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் சங்க இலக்கியத்தில் எதையும் எடுத்துக்கொள்ள கூடாது.

வடக்கிருத்தலை மேற்கொள்ளும் போது எத்தகைய ஆசைகளும் இருக்கக்கூடாது. தூய மனதோடு வீடுபேறு அடைவதை மட்டுமே குறிக்கோளாக கொள்ள வேண்டும். . வீடுபேறு ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

சல்லேகணை செய்வது தற்கொலைக்கு ஒப்பனாது என்று பௌத்தக் காப்பியமாகிய குண்டலகேசி கூறுகிறது. இது தற்கொலை இல்லையென்பதை நீலகேசி ,

''அழிவு காலத் தறத்தொடர்ப் பாடெல்லாம்
ஒழியல் வேண்டுமென் றொற்றுமை தாங்கொளீஇ
வழியுங் காட்டுமம் மாண்புடை யார்கண்மேல்
பழியிங் கிட்டுரைத் தாற்பய னென்னையோ?''[23]

என்று கூறியுள்ளது. உரை எழுதிய சமயதிவாகர வாமன முனிவர் இவ்வாறு விளக்கம் தருகிறார். சல்லேகணையாவது மரணகாலத்துச் சாகின்றோமென்று "சங்கிலேசம் (வருத்தம்) தெரிவிப்பது பஞ்சநமஸ்காரம் பரம மந்திர உபதேசம் செய்வதைக் கூறும் பாடல்''[24]

"எல்லாப் படியும் விளக்கப்படாது எரியல்
இல்லம் அழியில் அதனகத்தில், நல்ல
பொருள் கொண்டு போவான்போற் சாம்போது பற்றற்று
அருள்கொண்டு போத லறம்''[25]

என்பனவற்றால் சல்லேகணை என்று அறிந்துக் கொள்ள முடிகிறது. பத்திரபாகு முதலான சமண சமய பெரியார்கள் பலர் சல்லேகணை செய்து உயிர்விட்ட செய்தியை மைசூர் நாட்டில் சிரவணபெலகொள என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டுச் சாசனங்களின் மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது.

### இன்றைய நிலையில் வடக்கிருத்தல்

வடக்கிருத்தல் என்பது தன்னுடைய வீரத்திற்கு இழுக்கு நேராத வண்ணம் தன்மானத்தைப் பாதுகாத்து வடக்கிருந்து உயிர்விட்டனர். சமண சமயத்திலும் வடக்கிருத்தல் என்பது சல்லேகணை என்று குறிப்பிடுகின்றனர். தற்காலத்தில் வடக்கிருத்தலின் திரிபாகத்தான் உண்ணாவிரதப் போராட்டம் என காணப்படுகிறது. ஆனால் தற்பொழுது மனிதர்கள் சுயநலத்திற்காக உண்ணாவிரதப் போராட்டம் என்று ஆரம்பித்துவிட்டனர். இதை ஒரு ஆயுதமாகவே கொண்டுள்ளனர். இவை பெரும்பாலும் ''ஒருபகல் வாழ்க்கைக் கொண்ட ஈசல் போல்''[26] சில மணிநேரங்களில் முடியக் கூடியதாகவும் அல்லது ஒரு சில நாளில் முடிந்துவிடக் கூடியதாகவும் இருக்கின்றன. இன்றைய சூழலில் உண்ணா நோன்பு என்னும் பெயரில் நிலைத்துவிட்டது. ஆனால் சங்க இலக்கியங்களில் அவ்வாறு காணப்படவில்லை வீரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

### நிறைவுரை (Foreword)

சங்க இலக்கியங்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வடக்கிருத்தல் செய்திகள் நம்முடைய தமிழ் இலக்கியங்களில் உள்ளதை அறிய முடிகிறது.

திருக்குறள்களிலும் வடக்கிருத்தலுக்கு உண்டான சான்றுகள் காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் ஆண்கள் மட்டும் வடக்கிருந்தனர் ஆனால் பிற்காலத்தில் தோன்றிய சமண சமயங்களில் ஆண் பெண் இருவரும் வடக்கிருக்கும் செய்தியை அறிய முடிகிறது.

தற்காலத்தில் வடக்கிருத்தல்அஞ்சினான் புகலிடம் என்பதுான் உண்ணா ,சல்லேகணை , .நோன்புஅல்லது உண்ணாவிரதமாக திரிபடைந்துள்ளதை அறிய முடிகிறது

### அடிக்குறிப்புகள் (Foot Notes)

1. திருஞானசம்பந்தம் ச தொல்காப்பியம் பொருளதிகாரம் ப -92

2. சீனிவேங்கடசாமி மயிலை, சமணமும் தமிழும், ப - 182
3. மேலது, ப - 181
4. முருகன் இரா சங்கப்பாக்களில் தொல்குடிக் கூறுகள் ப –21
5. சாமிநாதையர் உ.வே, புறநானூறு மூலமும் உரையும், ப - 480
6. சாமிநாதையர் உ.வே, புறநானூறு மூலமும் உரையும், ப - 184,
7. வரதராசன் மு, திருக்குறள் தெளிவுரை, ப - 197
8. சுப்பிரமணியம் ச.வே, அகநானூறு மூலமும் உரையும், ப - 82,
9. சண்முகம் மு –சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் ப - 284
10. செண்பகலட்சுமி செ, புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்கள், ப - 86
11. சாமிநாதையர் உ.வே, புறநானூறு மூலமும் உரையும், ப - 459,
12. மாணிக்கம் அ புறநானூறு மூலமும் உரையும் ப – 46
13. வரதராசன் மு, திருக்குறள் தெளிவுரை, ப - 161
14. மாணிக்கம்.அ புறநானூறு மூலமும் உரையும், ப - 46
15. வரதராசன் மு, திருக்குறள் தெளிவுரை, ப – 231
16. அறவாணன் க.ப சிறுபஞ்ச மூலமும் உரையும் ப - 90
17. பாலசுப்பிரமணியன் கு.வெ, பரிமணம் அ.ம புறநானூறு மூலமும் உரையும் ப - 123
18. முருகன் இரா சங்கப்பாக்களில் தொல்குடிக் கூறுகள் ப –19
19. சீனிவேங்கடசாமி மயிலை, சமணமும் தமிழும், ப - 180
20. மேலது, ப - 180
21. மேலது, ப - 180
22. மேலது, ப - 183
23. மேலது, ப - 183
24. மேலது, ப – 181
25. மேலது ப - 181
26. செண்பகலட்சுமி செ, புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்கள், ப - 90

********* ********* ********** ********* ********* ********** ********** **********